—M 5720 வெள்ளிக் கிழமையில குருகுலத் தாள

6 - DEC 1954

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை-7 குருகுலம், மாம்பாக்கம்; செய. கார்த்திகை, ௧௧ 26—11—54 தளி -8

## இந்திய முன்னேற்றம்

'கல்வியில் எல்லா ஆராய்ச்சிகளுக்கும் ஊக்கமளிக்க வேண்டும். நாட்டின் தேவைக்கு ஏற்ற கல்வி முறையைக் கண்டுபிடிக்க இது வழிகோலும்; தற்போது அடிப்படைக் கல்வியில் ஆராய்ச்சிகள் நடத்தப்படுகின்றன. இத்துடன் மற்றக் கல்வி முறைகளிலும் ஆராய்ச்சிகள் நடத்தினால்தான் வேற்றுமையில் ஒற்றுமை காண முடியும்.'

* * *

'பாஷை, மதம், பழக்க வழக்கங்களில் வேறுபாடு காணப்பட்டபோதிலும் நாம் அனைவரும் இந்தியா சுபிட்சமடையப் பாடுபட வேண்டும். வேற்றுமைகள் கடவுள் நமக்கு அளித்த வரப்பிரசாதம்தான்; சீதோஷ்ணம் முதலிய விஷயங்களில் ஓரிடத்திற்கு மற்றொரு இடம் மாறுபட்டிருப்பதே இந்தியாவுக்கு ஒரு அழகைக் கொடுக்கிறது.

* * *

'ஏதாவது ஒரு சமூகத்தில் நல்ல பழக்க வழக்கம் இல்லாமலிருந்தால் அதை அந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள்தான் ஒழிக்கவேண்டுமே தவிர மற்றச் சமூகத்தினர்கள் அதில் தலையிட உரிமை கிடையாது. இப்படித் தலையிட்டால் வகுப்புச் சச்சரவுகள் விளையும். சுதந்திரம் கிடைத்த பிறகு நாம் எதிர்பார்த்த அளவுக்கு முன்னேறவில்லை என்பது உண்மையே. வறுமை, எழுத்தறிவின்மை, நோய் இவை இன்னமும் தேசத்தில் தலைகாட்டுகின்றன.

—இந்திய ஜனாதிபதி.
(மஹாராஜா சாயாஜி ராய் கெய்க்வாட் கல்லூரி விழாவில்)

———

'எதிர்காலத்தில் பெரும் பொறுப்புகளை ஏற்க இளம் வாலிபர்கள் தங்களைத் தயார் செய்து கொள்ள வேண்டும்.

* * *

'சிறுவர்களும், சிறுமிகளும் கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் படிக்கும்போதே விஷயங்களைக் கற்றுக்கொண்டு இந்தியாவின் நல்ல பிரஜைகளாகத் திகழவேண்டும்.

'வாலிபர்கள் ஒற்றுமையுடன் வாழவேண்டும். எதிர்கால இந்தியாவை நிர்மாணிக்கும் பொறுப்புகளைஏற்க அவர்களுக்குப் பூர்ணப் பயிற்சி அளிக்கவேண்டும். அவர்கள் திடகாத்திரர்களாகவும், மனோவலிமை பெற்றவர்களாகவும் இருந்தால்தான் பொறுப்புகளை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும். பலஹீனமான சிறுவர்களாலும் சிறுமிகளாலும் பொறுப்புகளை நிறைவேற்ற முடியாது. இந்தியாவில் பல மொழிகளும், பல பண்பாடுகளும் இருந்தபோதிலும் இந்தியா ஒன்றுபட்டதன்று என்று கருதக்கூடாது. நவ இந்தியாவை நிர்ணயிப்பதில் எல்லோரும் சம பங்காளிகளே.'

—இந்தியப் பிரதம மந்திரி.
(டில்லி கஸ்தூரிபாய் சாந்தி நிகேதன் சிறுவர் சிறுமியர் கூட்டத்தில்)

———

'நம் நாட்டில் அத்தியாவசியப் பொருள்களை அதிகமாக உற்பத்தி செய்வதற்குக் கல்வி முறை உதவியாக இருக்கவேண்டும்.

* * *

'ஜனத்தொகை பெருகி வரும் நம் நாட்டில் ஆக்க வேலைகளில் அதிகமாக ஈடுபட வேண்டும்.'

—சென்னைக் கல்வி மந்திரி.
(சென்னைக் கார்ப்பொரேஷன் ஆரம்பப் பள்ளி ஆசிரியர் சங்கத்தில்)

# "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

**7-ம் ஆண்டுக் கையொப்பம்**
**(8-10-54 முதல்)**

| | | | | |
|---|---|---|---|---|
| உள்நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |
| ஆயுள்— | | | | |
| கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."

—புறநானூறு.


| கிளை | செய, கார்த்திகை, | தளிர் |
|---|---|---|
| 7 | 26-11-54 வெள்ளி. | 8 |


# பேட்டைத் தொண்டுகள்

குருகுலம் பணிநோக்குடையது. அதிற் சேர்ந்திருப்பார் அனைவரும் தத்தம் நிலைமைக்குத் தகத் தனித்தோ குருகுலத்தின் சார்பிலேயோ ஏதேனும் ஒரு பணியையாவது தொடர்ந்து செய்து வரவேண்டும்; பணி ஆர்வமுள்ளோர் பலரையும் குருகுலத்தில் சேர்த்தல் வேண்டும். "வித்தகம் பேசவேண்டாம் பணிசெய்ய வாரீர்!" என்பது தான் குருகுலத்தின் அறைகூவல்.

ஆகவே, குருகுலத்திற் சேர்வதன் தலையாய நோக்கம் பணி மேற்கொள்வதுதான் பணிமுகமாகவே வாழ்வியல் மெய்ப்பொருள் உண்மைகளை ஆசிரியரிடமிருந்தும், அடைவினூலும் அறிந்துகொள்ள வேண்டும். தீர்ந்த உண்மைகள் அப்போதுதான் தெரியவரும்.

தனித்துப் பணிசெய்வதை விடச், சேர்ந்து பணி செய்வது பல வகையில் நன்மை குருகுலத்தார் அனைவரும் ஒன்றுபட்டுப் பணி செய்வதோடு, நாட்டிலுள்ள பல்வேறு அமைப்புகளோடும் தொடர்பு பட்டுப் பணி செய்யவேண்டும். பல துறைகளிலும் பணி நடைபெறவேண்டும். ஆசிரியர் வகுத்துத் தந்துள்ள பன்னிரு பணிகளாகவுள்ள குருகுலப் பணித்திட்டம் அப்போதுதான் நிறைவேறும்.

சென்னை, தமிழகத்தின் தலைநகரம். தென்னாட்டிலேயே முதன்மையான நகரம். ஆகவே, அங்கே செய்யும் தொண்டுகள் நாளடைவில் நாடு முழுதும் பரவும். சென்னைப் பேட்டைகளில் பெரும்பாலனவற்றில் குருகுலத்தார் இருக்கின்றனர். ஆகவே, குருகுலத்தார் சூழல் அங்கே மிகுதியாக இருக்கிறது. அச்சூழலை நல்ல முறையில் உருப்படுத்திப் பயன்படுத்தினால் நாடு முழுவதும் நல்ல தெளிவைப் பெற வாய்ப்பிருக்கிறது.

இப்போது நாட்டில் பல துறையிலும் குழப்பமான சூழ்நிலையே நிலவுகிறது. குருகுலத்தார் தொண்டு முகமாக நாட்டில் தெளிவு நிலையை உண்டாக்க வேண்டும் என்பது ஆசிரியரின் திருவுள்ளம். அதற்கான ஆக்கச் சூழலை உண்டாக்கவே இப்போது பேட்டை தோறும் அவர்கள் முன்வந்து வழிபாடும் தொண்டும் மேற்கொள்ளுகி... கள். இவை ஓராண்டுக் கா... நடைபெறும்

கிழமைக்கு ஒரு முறை குருகுலத்தாருடன் ஒவ்வொரு பேட்டைக்கும் சென்று அங்கங்கே உள்ள திருக்கோயில்களைக் களங்களாகக் கொண்டு ஆசிரியரவர்கள் இயன்ற பணிகளைத் தாமே முன்னின்று செய்து வருகிறார்கள்.

சனிக்கிழமைதோறும் பிற்பகலில் குருகுலத்தாருடன் ஒரு பேட்டையைச் சார்ந்து, திருவள்ளுவரையும் (திருக்குறளையும்) அவர் தொழும்படி கட்டளையிட்டுள்ள திருவடியையும் அரிய மொழிகள் அடங்கிய அட்டைகளையும் தாங்கிக்கொண்டு, ஆடவரும் மாதரும் தனித்தனியே அணிவகுத்து வர, ஊர்வலம் வருகிறார்கள். திருக்கோயிலை அடைந்து, அங்கே சொற்பொழிவாற்றித் திருக்குறள் அடிப்படையில் பொதுவாக இக்காலப் பொதுமக்களுக்கு நேர்ந்துள்ள பல துறைக் குழப்பங்களைத் தெளிவுபடுத்தியும் சிறப்பாகச் சமயத் துறை பற்றிய விளக்கங்களையும் சீர்திருத்தக் குறிப்புகளையும் கொடுத்தும் மக்களை மகிழ்விக்கிறார்கள். இறுதியில் திருக்கோயில் வழிபாட்டைச் செய்து, திருவருளடிப்படையில் பேட்டையின் நலங்களை எண்ணுகிறார்கள். மறுநாள் ஞாயிற்றுக் கிழமையன்று காலையிலும் அங்கே தங்கித் திருவடி வழிபாடு செய்து, அந்தப் பேட்டையின் முன்னேற்றம் பற்றித் தேனிக்கிறார்கள். அப்போது கூடும் அன்பர்களுக்குச் சிறப்பு விரிவுரை ஒன்றையும் செய்கிறார்கள். தனித்தும் சேர்ந்தும் வந்து தமக்கேற்படும்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)